03.08.2026

C.C: 154-2018
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.08.2026

அ.சா.3–பன்னீர்செல்வம் , வயது. 58/2026, த/பெ. கிருஷ்ணன்
(எதிரி ஆஜர்.)

**எதிரி தரப்பில் மனுவின் பேரில் குறுக்கு விசாரணை–**

இவ்வழக்கில் இறந்துபோனவர் எனக்கு சித்தப்பா என்றால் சரி. சம்பவத்தை நான் கேள்விப்பட்டு தான் தெரிந்து கொண்டேன். நான் முதல் விசாரணையில் சொன்னபடி, குழந்தைவேல் பெட்டிக்கடையில் நின்றதாக எனது போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரி. எனது முதல் விசாரணையில் சொன்னபடி, இரண்டு வண்டிகளும் ஆற்றில் விழுந்துவிட்டதாக போலிசார் விசாணையில் சொல்லவில்லை என்றால் சரி. விபத்து நடந்த இடத்தில் கூட்டமாக இருந்தது. நான் இறந்துபோனவரை மருத்துவமனைக்கு கொண்டு செல்லும்போது தான் பார்த்தேன். முதல் விசாரணையில் சொன்னபடி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**Typed down to my dictation, in my presence and hearing, and under my personal direction and superintendence and admitted by the witness to be correct.**

**(Sd/-……..G. Sudha., 03.08.2026)**
**Dm-cum-Jm, Vedaranyam.**

03.08.2026

C.C: 154-2018
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.08.2026

அ.சா.4–மாரியப்பன் , வயது. 65/2026, த/பெ. பசுபதி
(எதிரி ஆஜர்.)

## எதிரி தரப்பில் மனுவின் பேரில் குறுக்கு விசாரணை–

இவ்வழக்கில் இறந்துபோனவர் எனது ஊரைச் சேர்ந்தவர் என்றால் சரி. சம்பவத்தை நான் கேள்விப்பட்டுத்தான் , சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றால் சரி. நான், பட்டியல் சாட்சி மனோகரன், திருநாவுக்கரசு, பன்னீர்செல்வம் ஆகியோர் சுமார் 09.00 மணிக்கு வேதாரண்யம் காவல் நிலையத்திற்கு சென்றோம். மேற்படி என்னையும் அ.சா.1 முதல் 3 வரையிலானவர்களையும், இவ்வழக்கில் சாட்சிகளாக போட்டுள்ளதாக வேதாரண்யம் காவல் நிலையத்தார் சொன்னார்கள் என்றால் சரி. நாங்கள் சம்பவ இடத்திற்கு செல்லும் முன்பாகவே வேதாரண்யம் போலிசார் விபத்தில் ஈடுபட்ட வாகனத்தினை எடுத்துச் சென்றுவிட்டார்கள் என்றால் சரி. நான் முதல் விசாரணையில், நீதிமன்றத்திற்கு வந்தபோது, வேதாரண்யம் நீதிமன்ற காவலர் சொல்லியபடி சாட்சியம் அளித்தேன் என்றால் சரி.

**Typed down to my dictation, in my presence and hearing, and under my personal direction and superintendence and admitted by the witness to be correct.**

**(Sd/-……..G. Sudha., 03.08.2026)**
**Dm-cum-Jm, Vedaranyam.**